விடுதி கட்ட தனியாருக்கு அனுமதி.

*1826. திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1986–87 மகாபலிபுரத்தில் அரசுக்குச் சொந்தமான இடத்தை தனியாருக்கு விடுதி கட்ட தமிழக அரசு கொடுத்துள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை கிரவுண்டு இடம், யாருக்கு, என்ன விலையில் வழங்கப்பட்டுள்ளது?

(இ) அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1983 ஆம் ஆண்டில் தொடங்கி அரசுக்கு சொந்தமான இடங்கள் மட்டுமல்லாது, கோயிலுக்குச் சொந்தமான நிலங்களையும் சுற்றுலா வளர்ச்சிக்கான நோக்கத்துடன் தனியாருக்குக் கொடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்தது.

9-20 மணி

1989–ஆம் ஆண்டு ஜனவரியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மீண்டும் கலைஞர் அர்களுடைய கழக ஆட்சி பதவிக்கு வந்ததால் இந்த முறைகேடுகள் தடுத்து நிறுத்தப்பட்டன.

(ஆ) மற்றும் (இ): தனியாருக்கு வழங்கப்பட இருந்த நிலங்களின் விவரம். மாமல்லபுரத்தில் ஏறத்தாழ 100 ஏக்கர் நிலத்துடன் கட்டடங்கள்— Hotel Tamil Nadu and Camping Site என்ற கட்டடங்கள்—முட்டுக்காட்டில் ஏறத்தாழ 63 ஏக்கர் நிலம்; திருவிடந்தையில் ஏறத்தாழ 300 ஏக்கர் நிலம்—கோவிலைச் சேர்ந்த 192 ஏக்கர் நிலம் உட்பட பட்டா நிலமும் சேர்த்து 300 ஏக்கர் நிலம்—வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே ஏறத்தாழ 93 கிரவுண்ட் நிலம்; அதைப்போல பழைய லா காலேஜ் ஹாஸ்டலுக்குச் சொந்தமான 17 கிரவுண்ட் நிலம்.

திரு. கோ. வீரையன்: தலைவர் அவர்களே, கோயிலுக்குச் சொந்தமான இடங்களையும், அரசுக்குச் சொந்தமான இடங்களையும் கூட தனியாருக்கு கொடுப்பதற்கு அரசு முடிவெடுத்திருந்தது என்று சொன்னார்கள். அதையெல்லாம் இப்போது

ரத்து செய்து அரசும், கோயில் நிர்வாகமும் திருப்பி அவர்களே கைபற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால் அது மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுற்றுலா கழகத்திற்கு நல்ல காலம் வந்ததன் காரணமாக, 1983-ம் ஆண்டில் தொடங்கி இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் கூட, இதற்கான ஒரு ஒப்பந்தம் அந்த தனியாருக்கும்—தனியார் என்றால் மோகன்ராவ் தண்டமுடி என்ற ஒரு அமெரிக்கா இந்தியர் இந்தியாவைச் சேர்ந்தவர் ஆனால் அமெரிக்காவில் வாழ்கிறவர்- அவருக்கும் நம்முடைய சுற்றுலாத் துறைக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட இருந்தது. கடைசிவரையில் அந்த ஒப்பந்தம் முடிவாகவில்லை. நம்முடைய ஆட்சி வந்த பிறகு அந்த ஒப்பந்தத்தை நாங்கள் ரத்து செய்துவிட்டோம். ஒப்பந்தத்தை நாங்கள் இறுதி செய்யவில்லை. அது தவிர இந்த இடைக்காலத்தில், மாமல்லபுரத்தில் இருந்த தமிழ்நாடு ஒட்டல் ஏறத்தாழ 10 கோடி ரூபாய் பெருமானமுள்ள 100 ஏக்கர் நிலமும், கட்டடமும் இடைக்காலத்தில் இந்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்பாகவே ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் லீஸ் என்ற அளவில் கொடுக்கப்பட்டு இருந்தது. அதையும் ரத்து செய்து கடந்த ஆண்டில் அந்த இடமும் கையகப்படுத்தப்பட்டது. மற்றப்படி ஏனைய இடங்கள், கோயில் நிலங்களை அவர்கள் இறுதியாக பட்டா செய்ய முடியவில்லை. கோயிலோடு தான் இருக்கிறது. திருவிடந்தையில் நித்திய கல்யாணி சுவாமி கோயில். ஆகவே, இதிலே எந்தவிதமான முறைகேடும் இறுதியாக நடைபெறவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் கோயில்கள் அதைப்போல சுற்றுலா மையங்கள், அப்படிப்பட்ட இடங்களில் உள்ள அரசு நிலத்தை அரசு கொடுப்பதற்குப் பதிலாக அவர்களே எடுத்துக் கொள்கிறார்கள் அந்தந்தப் பகுதிகளில் இருப்பவர்கள் எடுத்துக் கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்கள் எத்தனை ஏக்கர் அளவிற்கு இந்த மாநிலம் முழுவதும் போயிருக்கிறது என்று அரசு அறியுமா? இனிமேல் அவைகளை முறையாக பயன்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிகிறேன்,

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, இது சுற்றுலா சம்பந்தப்பட்ட கேள்வி. இருந்தாலும் கோயிலைப் பற்றி கேட்பதால் நான் சொல்கிறேன். பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் இது வரையில் கோயிலைச் சேர்ந்த நிலங்களை தனியார் கையகப்படுத்தி இருக்கிறார்கள். ஆனால் நல்லவிதமாக கவர்னர் ஆட்சிக்காலத்தில் மேற்கொண்டு எந்தவிதமான நில மாற்றமும் இருக்கக்கூடாது, till an elected Government takes a policy decision

என்ற அளவில் கோப்பில் ஒரு ஆணையிட்டதன் காரணமாக இது வரையில், நம்முடைய ஆட்சி ஏற்பட்ட பிறகு எந்தவிதமான நிலத்தையும் மாற்றித் தரவில்லை. அதற்கான ஒரு கொள்கை குறிப்பு ஆய்விலே இருந்து கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு தான் எங்கெங்கே கோயிலுக்கு தேவையில்லையோ, அவைகள் தான் தனியாருக்கோ அல்லது பொது நிறுவனங்களுக்கோ மாற்றி கொடுக்கப்படும். இதற்கு முன்பாகவே சட்டவிரோத மாக யார் யாரெல்லாம் ஆக்கிரமிப்பு செய்து வைத்திருக்கிறார் களோ, அந்த நிலங்களை மீட்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

சாத்தனூர் அணைப் பகுதியில் தங்கும் விடுதி, ஹோட்டல் அமைத்தல்.

*4429. திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம், சாத்த னூர் அணைப் பகுதியில் சுற்றுலாத்துறை மூலமாக சிறிய அளவில் தங்கும் விடுதி, ஹோட்டல் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

9-25 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சாத்தனூர் அணைப் பகுதியில் சுற்று லாத்துறையின் மூலமாக தங்கும் விடுதி அமைக்கக்கூடிய செயற் குறிப்பு ஆய்வில் இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, திருவண்ணாமலைக்கு அருகிலே சாத்தனூர் அணை இருக் கிறது. தமிழகத்திலேயிருந்து சுற்றுப் பயணம் வருகின்றவர்கள், ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். அதைப்போல திருவண்ணா மலை நகரத்திலேயுள்ள அருணாசலேஸ்வரர் கோவில், ரமண மகரிஷியினுடைய கோவிலுக்கு உலக அளவிலே இருந்துகூட சுற்றுலாப்பயணிகள் வருகிறார்கள். ஆனால் தங்குவதற்கு இடவசதி இல்லை. இதை எல்லாம் மனதிலே கொண்டு சாத்தனூர் அணையிலேயும், திருவண்ணாமைல நகரத்திலேயும் இதைப்போன்றதங்கும் விடுதிகள் கட்டப்படுமா? அதற்கான மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா என நான் அறிய விரும்புகிறேன்.